1974 மார்ச் 26]

திரு. த. சோனையா : தலைவரவர்களே, அந்தக் குளத்திலே மதுரை மாநகராட்சிக் கட்டிடம் கட்டப்படுகிறது. இப்பொழுது விஞ்ஞான நாகரீக காலத்திலே, மற்ற இடங்களில் ஏர் கண்டிஷன் என்று செய்து கொள்கிறார்கள். இதில் இயற்கையாகவே சுற்றித் தண்ணீர் இருப்பதால் ஏர்கண்டிஷன் அறையைப்போல் அலுவலாளர்களுக்குக் குளிர்ச்சி எந்த நேரத்திற்கும் இருக்கும் என்பதால், அதைச் சுற்றிலும் தண்ணீரை நிரப்பி அதை ஏர்கண்டிஷன் போன்ற அளவிற்குச் செய்வார்களா? மேலும், இந்தக் கட்டிடம் எந்த ஆண்டிற்குள் முடியும் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்ன பதிலைக் கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கவில்லை என்று எண்ணுகிறேன்.

Labour dispute in Addison and Company

* 622 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state the steps taken by the Government to settle the dispute between workers and management in Addison & Company, Madras?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, விவர அறிக்கை@ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்த அடிசன் கம்பெனியில் தொழில் தகராறு ஏற்பட்டு, அதனால் வாலண்ட்ரியாக 333 பேர்களும், கம்பெனி டெர்மினேட் செய்ததால் 233 பேர்களும் வேலையிழந்திருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கம்பெனி பவுண்டரியே மூடப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். டிசம்பர் மாதம் 10-ஆம் தேதி மறுபடியும் அந்த பவுண்டரி திறக்கப்பட வேண்டுமென்றும், வேலையிழந்த தொழிலாளர்களை 'ரீ-இன்ஸ்ட்டேட்' செய்ய வேண்டுமென்று லேபர் ஆபீசர் முன்பு அந்த விஷயம் இருப்பதாக அறிகிறேன். இந்தியாவிலேயே மிகவும் முக்கியமான பவுண்டரி. எனவே, இதைத் திறக்கும் முறையிலே சர்க்கார் ஆதரவு கொடுத்து, மறுபடியும் பரிசீலனை செய்கிறார்களா? அந்தப் பரிசீலனை எந்த அளவில் இருக்கிறது என்பதையும் அறிவிப்பார்களா?

@ 359-362-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1974 மார்ச் 26

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, ஒரு சின்ன பிரச்னையிலே எழுந்த தகராறின் விளைவாகப் பெரிய பவுண்டரியே மூடப்பட்டிருக்கிறது. நிர்வாகத்தினர் மீண்டும் அதைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்ய மறுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதிலே உள்ள தொழிலாளர்களும் மற்ற வேலைக்குப் போய்விட்டதாக என்னிடத்திலே தகவல்கூட இருக்கிறது. இதிலே மீண்டும், அரசைப் பொறுத்தவரையில், ஒரு லேபர் ஆபீசர் முன்னிலையில் இதை வைத்து ஏதாவது செய்ய முடியுமா என்ற நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவரவர்களே, விவர அறிக்கையில் 65 பேர்கள். Retired on voluntary basis என்றும், டெர்மினேஷன் 233 பேர்கள் என்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அமைச்சரவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்தில் ஒரு சின்ன பிரச்னைக்காக ஆரம்பித்தது என்று சொன்னார்கள். வேண்டுமென்றே, திட்டமிட்டு, இந்தச் சின்னப் பிரச்னைக்காகக் காத்துக் கொண்டிருந்து, ஒருவர் நீக்கப்பட்டார் என்பதற்காக சென்ற வருஷம் ஜனவரி மாதம் 24-ஆம் தேதி வேலை நிறுத்தம் ஏற்பட்டு, 25-ஆம் தேதி லாக்-அவுட்டை வேகமாகச் செய்துவிட்டு, திட்டமிட்டு, இதை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு, பிறகு வேண்டுமென்று மூடப்பட்டிருக்கிறது. இப்படிப் பாதிக்கின்ற வகையில் தொழிலாளர்களுக்கு விரோதமான போக்கைக்கொண்டிருக்கின்ற இந்த நோய் மற்ற தொழில்களிலும் பரவலாக வரக்கூடாது என்பதற்காக திட்டமிட்டு ஏதாவது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயாராக உள்ளதா ? ஏனென்றால் இப்படியே விட்டு விட்டால் மற்றத் தொழிலதிபர்களும் இதைக் கையாள்வார்கள். எனவே, இந்தப் போக்கை மாற்றுவதற்கு அரசாங்கம் திட்டவட்டமாக ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா ? அந்தக் கம்பெனியை அரசாங்கமே ஏற்று நடத்துவதற்குத் தயாராக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரையில் தொழிலாளர் நல விரோத அரசு அல்ல என்பதை மட்டும் உறுதியாக, திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் ஏன் சின்ன பிரச்னையால் வந்தது என்று சொன்னேன் என்றால், இரண்டு சாராரும் இப்படிப்பட்ட பிரச்னைகளில் அதிகக் கவனம் செலுத்த வேண்டு

1974 மார்ச் 26]

மென்பதற்காக அறிவித்தேனே தவிர வேறொன்றுமில்லை. இப்படிப்பட்ட சின்னத் தகராறுகளினால் பெரிய விளைவுகள் ஏற்படாத வகையில் அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Textile workers in Coimbatore

623 Q—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the Committee appointed by the Government to examine the grievances of textile workers of Coimbatore has submitted its report; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) இவ்வறிக்கை அரசின் ஆய்வில் இருக்கும்பொழுது பஞ்சாலைத் தொழிலாளர்களின் சார்பாக பெரும்பாலான தொழிற் சங்கங்கள் தங்களது கோரிக்கையான அடிப்படைச் சம்பளம், பஞ்சப்படி முதலியவைகளின் மற்றத்தை வலியுறுத்தி பஞ்சாலை நிர்வாகத்தினருக்கு வேலைநிறுத்த அறிவிப்புகளைக் கொடுத்தது. தொழிலாளர் துறை ஆணையரின் சமரச பேச்சுவார்த்தைகள் உடன்பாட்டுக்கு வழிவகுக்காததால் தொழில் தகராறுகள் சட்டம் 1947 (மத்தியச் சட்டம் XIV 1947) பிரிவு -ன்கீழ் அரசு ஒரு சிறப்பு தொழிற் தீர்ப்பாயம் அமைத்தது. ஓய்வுபெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியான திரு. ஆர். சதாசிவம் அச்சிறப்பு தொழிற் தீர்ப்பாயமாக நியமிக்கப்பட்டு மேற்கூறப்பட்ட தொழிற் தகராறு தீர்ப்புக்காக விடப்பட்டது. இம்மாநிலத்தில் பெரும்பாலான பஞ்சாலைகளில் 1—2—1974 முதல் பொது வேலைநிறுத்தம் தொடங்கியது. பெரும்பாலான நிர்வாகத்தினருக்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையே 28—2—1974 அன்று ஒரு இரு தரப்பு ஒப்பந்தம் கையெழுத்தாகியது. பி அன்டு சி மில்ஸ், தாராபுரத்திலுள்ள கோவை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை நீங்கலாக, 1—2—1974 முதலும் அதன் பிறகும் அடிப்படைச் சம்பளம் மற்றும் பஞ்சப்படி முதலிய கோரிக்கைகளின் மீது வேலைநிறுத்தம் நடைபெற்ற பஞ்சாலைகளில் 1—3—1974 முதல் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது. தாராபுரத்திலுள்ள கோவை மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில் 7—3—1974 முதல் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது.